"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

## தமிழ்மொழி ஆண்டு 10

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3**

1. வாழ்க்கை நிலையாமையையும் இறைசிந்தனையையும் மறைபொருள் ஊடாகப் புலப்படுத்தியவர்கள்
   1. சித்தர்கள்
   2. பாணர்கள்
   3. நாத்திகர்கள்

2. நான் சோற்றுடன் பொரியல் உண்டேன். இதில் வந்துள்ள ஆகுபெயர்
   1. பொருளாகுபெயர்
   2. சினையாகுபெயர்
   3. தொழிலாகுபெயர்

3. ஓர் எழுத்தாக்கத்தை இன்னொரு மொழிக்கு அதன் தனித்துவங்களைப் பேணி மாற்றியமைப்பது
   1. மணிப்பிரவாளம்
   2. கலைச்சொல்லாக்கம்
   3. மொழிபெயர்ப்பு

4. எறும்பூரக் கற்குழியும் என்னும் பழமொழிக்கு ஒப்பான பழமொழி
   1. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
   2. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
   3. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்

5. பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் அமையும் ஓரெழுத்து ஒருமொழிச்சொல்
   1. வா
   2. தீ
   3. தை

6. திருமால், முருகன், கொற்றவை முதலிய தெய்வங்களைப் பற்றிப் பாடும் பாடல்களைக் கொண்ட சங்கநூல்
   1. பரிபாடல்
   2. நற்றிணை
   3. கலித்தொகை

7. அண்ணாமலைப்பல்கலைக்கழகம், இலங்கைப்பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தவர்
   1. விவேகானந்தர்
   2. விபுலானந்தர்
   3. பரமானந்தர்

8. முகுந்தன் கூட்டத்திற்குச் சமூகம் அளித்தான். இதில் வந்துள்ள வழுவான சொல்
   1. கூட்டம்
   2. சமூகம்
   3. அளித்தான்

9. ஈழத்துக் கவிஞர் புதுவை இரத்தினதுரை பல கவிதைகளைப் புனைந்தார். இதில் புனைந்தார் என்பது
   1. இயற்றினார்
   2. பதிப்பித்தார்
   3. கதைத்தார்

1 2 3

10. பாட்டு, செய்யுள், கவிதை போன்ற பல சொற்களைக் குறிக்கும் ஒருசொல்
    1. கா
    2. பா
    3. நோ

11. வல்லரசுகள் அணுவாயுதத்தடை ஒப்பந்தத்திற்கு இணக்கம் தெரிவித்தன. இதில் இணக்கம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. தயக்கம்
    2. விளக்கம்
    3. பிணக்கம்

12. வெள்ளியால் செய்த கொலுசு. இதில் ஆல் என்னும் வேற்றுமை உருபு உணர்த்துவது
    1. கருவிப்பொருள்
    2. கருத்தாப்பொருள்
    3. உடமைப்பொருள்

13. நற்றாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்தல் என்பதற்கு ஔவையார் எடுத்துக்காட்டிய உவமேயம்
    1. கற்றாரைக் கற்றாரே காமுறுவர்
    2. மூர்க்கரை மூர்க்கரே முகப்பர்
    3. தீயாரை தீயரே வெறுப்பர்

14. மலையிலிருந்து விழும் தண்மையான நீர் சூழலைப் பசுமையாக்கியது. இதில் தண்மை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. குளிர்ச்சி
    2. வெம்மை
    3. வரட்சி

15. ஒத்தபொருளைக் கொண்டு அமைந்த இணைமொழி
    1. மேடுபள்ளம்
    2. ஆதிஅந்தம்
    3. மூலைமுடுக்கு

16. இடைப்போலி பெற்று வந்துள்ள சொற்கள்
    1. மைஞ்சு மயல்
    2. அரைசு இலைஞ்சி
    3. அகன் பந்தர்

17. பகைவரையும் பொறுத்துக்கொள்ளும் பண்பை விளக்கும் உவமைத்தொடர்
    1. நீறுபூத்த நெருப்புப்போல
    2. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
    3. ஒருதாய் வயிற்றுப் பிள்ளைபோல

18. நன்மக்களிடையே சொல்லத்தகாத சொற்களை மறைத்துப் பிறசொற்களால் சொல்லுவது
    1. குழூஉக்குறி
    2. மங்கலம்
    3. இடக்கரடக்கல்

19. இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு இடமின்றி மிகவும் அல்லற்பட்டனர். இதில் அல்லல் என்பது
    1. துன்பம்
    2. சோர்வு
    3. களிப்பு

1 2 3

20. ஆசிரியர் குடிநீரை வீணாக்க வேண்டாமென்று கூறினார். இதில் குடிநீர் என்பது
    1. வேற்றுமைத்தொகை
    2. வினைத்தொகை
    3. பண்புத்தொகை

21. காலையில் தாமரை அழகாக மலர்ந்தது. இதில் வந்துள்ள திரிசொல்
    1. தாமரை
    2. அழகு
    3. காலை

22. எதிர்மறை இடைநிலைகளாக அமைபவை
    1. இல், மாட்டு
    2. கின்று, கிறு
    3. த், இன்

23. கரிகாற்சோழன் கல்லணை கட்டினான். இவ்வாக்கியத்தின் செயப்பாட்டுவினை வடிவம்
    1. கரிகாற்சோழன் கல்லணையைக் கட்டுவித்தான்.
    2. கல்லணை கரிகாற்சோழனால் கட்டப்பட்டது.
    3. கல்லணை கரிகாற்சோழனால் கட்டப்படுகிறது.

24. ஒரு சொல்லின் பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களில் அமையப் பாடுவது
    1. உயர்வுநவிற்சியணி
    2. சிலேடையணி
    3. தற்குறிப்பேற்றவணி

25. அடுத்தகிழமை எனது பிறந்தநாள் வருகின்றது. இதில் வந்துள்ள வழுவமைதி
    1. எண்வழுவமைதி
    2. காலவழுவமைதி
    3. இடவழுவமைதி

(25×1=25 புள்ளிகள்)

## 2. சேர்த்தெழுதுக.

1. பனை + ஓலை = ____________________
2. வேல் + படை = ____________________
3. எட்டு + நூறு = ____________________
4. சொல் + திறன் = ____________________
5. பண்டு + தமிழ் = ____________________
6. நுண்மை + மதி = ____________________

(6×1=6 புள்ளிகள்)

**3. பிரித்தெழுதுக.**

1. தேன்றுளி = ____________ + ____________
2. சிறப்புரை = ____________ + ____________
3. பவளவிழா = ____________ + ____________
4. எழுத்தியல் = ____________ + ____________
5. மாஞ்சோலை = ____________ + ____________
6. அகழ்வாய்வு = ____________ + ____________

(6×1=6 புள்ளிகள்)

**4. அ. திருவள்ளுவர் இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தினூடாக இல்லறத்தார்க்கு எவற்றை எடுத்துக்கூறுகிறார் என எழுதுக.**

**அல்லது**

**ஆ. கீழ்க்காணும் குறள்களின் பொழிப்புரையினை எழுதுக.**

1. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
   ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.
2. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும்.

(2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சுவாமி விபுலானந்தர் எழுதிய நூல்களின் பெயர்கள் இரண்டு தருக. (1 புள்ளி)

2. வடமோடி, தென்மோடிக் கூத்துகளிடையே காணப்படும் வேறுபாடுகள் எவை? (1 புள்ளி)

3. நடுகல் பற்றிக் கூறும் எட்டுத்தொகை நூல் எது? (1 புள்ளி)

4. மெய்ம்மயக்க வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் தருக. (1 புள்ளி)

5. ஒரு மொழிக்குள் வேறுமொழிகள் கலப்பதற்கான காரணங்கள் எவை? (2 புள்ளிகள்)

6. வேற்றுமை என்றால் என்ன? செயப்படுபொருள் வேற்றுமை என அழைக்கப்பெறும் வேற்றுமை எது? அதன் உருபு யாது? (2 புள்ளிகள்)

7. ஒரு கடிதத்தில் இடம்பெறும் ஆறு பெரும்பகுதிகளும் எவை? (1 புள்ளி)

8. பத்துப்பாட்டு நூல்களுள் ஐந்து தருக. (1 புள்ளி)

**6. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதிராயின்
மாண்ட என்மனைவியும் மக்கள் நிரம்பினர்
யான்கண் டனையர் என் இளைஞரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? (1 புள்ளி)

_______________________________________________

2. வேந்தன் எவ்வியல்பினைக் கொண்டவன்? (1 புள்ளி)

_______________________________________________

3. ‘நான்’ என்ற சொல்லுக்கு நிகரான சொல்லை இப்பாடலிலிருந்து தருக. (1 புள்ளி)

_______________________________________________

4. சான்றோர் எத்தன்மை உடையவர்கள்? (1 புள்ளி)

_______________________________________________

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக. (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

**7. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. நம்பிக்கை
2. அன்னையர் நாள்

(3 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. ஊடகங்களும் தமிழ்மொழியும்
2. கலைகளும் பண்பாட்டுத் தனித்துவமும்
3. ‘கொரோனா’ நோய்த் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

(7 புள்ளிகள்)

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கல்வி பயிலும் பருவம் இளமைப்பருவம் என்று சொல்லப்படுகிறது. கலைகள் பயில்வதற்கும் இளமைப் பருவமே சாலச்சிறந்தது. அதனாலேதான் 'இளமையில் கல்' என்னும் ஆணை பிறந்தது. மானுடராய்ப் பிறந்தவர் எல்லோருக்கும் இது பொதுவான நெறி. இதன்படி ஒழுக எல்லோரும் கடமைப்பட்டிருக்கின்றனர். பிள்ளைப்பருவம் புதிதாக வனைந்த சட்டி போன்றது. அப்போது அதன்மீது பதிப்பிக்கப்பெறும் உயர்ந்த எண்ணங்களும் சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறாது இருக்கும். மாணாக்கர்களுக்கு தொழிற்கல்வி இன்றியமையாதது என்று இக்காலத்தில் உலகெங்குமுள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர், மகளிர் ஆகிய இருபாலாருக்கும் வேண்டப்படுவது என்பதும் இப்பயிற்சி இளம்பராயத்திலேயே அளிக்கப்படவேண்டும் என்பதும் பலர் கருத்து. மானுட வாழ்க்கையானது ஒருவர்க்கு ஒருவர் செய்யும் உதவியை அடிப்படையாகக் கொண்டது எனும் கோட்பாடு இந்நாளில் அறவே மறைந்து போய்விட்டது. எங்கும் ஒரே போட்டி மயம். பகுந்தளித்தல் என்னும் பண்புக்குப் பதிலாக பறித்துப் பிடுங்குதல் என்னும் நிலையே மேலோங்கிக் காணப்பெறுகின்றது. நவீன படிப்பு முறையே இந்நிலைக்குக் காரணமாகிறது. கல்வியானது இப்போது போட்டிமயமாக மாறியிருக்கிறது. என்னென்ன முறைகளில் பிறரைவிடத் தாம் மேலாகலாம் என்பதுவே இக்காலத்தவர் பெறும் பயிற்சியாகும். வெறுப்பும் துயரமும் அதிகரிப்பது இதனாலேயே ஆகும்.

1. கல்வி பயில்வதற்குரிய பருவம் எது? (1 புள்ளி)

______________________________

2. தற்காலத்தில் பகுந்தளித்தல் என்னும் பண்புக்குப் பதிலாக மேலோங்கிக் காணப்பெறும் பண்பு யாது? (1 புள்ளி)

______________________________

3. இக்காலத்தில் அறிஞர்கள் எதனை வலியுறுத்துகிறார்கள்? (1 புள்ளி)

______________________________

4. இந்நாளில் அறவே மறைந்து போய்விட்டது எனக் கூறப்பெற்ற கோட்பாடு யாது? (1 புள்ளி)

______________________________

5. பிள்ளைப்பருவம் எதற்கு ஒப்பிடப்பெற்றுள்ளது? அதற்கான காரணம் என்ன? (2 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

6. இப்பந்தியில் வலியுறுத்தப் பெற்றுள்ள கருத்து யாது? (1 புள்ளி)

______________________________

______________________________

2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.

**Deutsch:**

Heute ist die Welt wohlhabend, der Grund für den Wohlstand ist der Verdienst der Weltarbeiter. Unser heutiges Leben basiert auf der harten Arbeit und dem Verdienst jedes einzelnen Arbeiters. Der **Tag der Arbeit** ist der Tag, an dem diese Arbeiter geehrt werden. Anfangs arbeiteten die Arbeiter auf der ganzen Welt bis zu zwanzig Stunden am Tag. Die amerikanischen Arbeiter protestierten und forderten am Tag acht Stunden der insgesamt vierundzwanzig Stunden zu arbeiten. Während dem Protest starben viele Arbeiter. Im Jahr 1886 am ersten Tag im Mai wurde der Antrag angenommen, dass die Arbeiter nur acht Stunden am Tag zu arbeiten haben. Die ganze Welt hat das Gesetz in die Praxis umgesetzt. Da dieses Gesetz am ersten Mai in Kraft getreten ist, wird dieser Tag als **Tag der Arbeit** gefeiert. Es ist ein Tag, der auf der ganzen Welt gefeiert wird.

**French:**

Aujourd'hui, si le monde regorge de ressources et de prospérité, c’est grâce aux efforts de tous les travailleurs. Tous les objets que nous utilisons aujourd’hui sont le produit du travail effectué par les travailleurs. La fête du Travail est une journée consacrée à honorer ces travailleurs. Au départ, les employés travaillaient jusqu'à 20 heures par jour. Les employés américains ont par la suite protesté pour la réduction des heures de travail à 8 heures sur les 24 heures par jour. Au cours de cette révolte, de nombreux travailleurs ont perdu la vie. Puis, c’est le 1er mai 1886 que leur demande fut acceptée et que la loi des 8 heures de travail par jour est entrée en vigueur. Toutes les nations du monde appliquèrent cette même loi. Cette loi étant entrée en vigueur un 1er mai, celle-ci est célébrée dans le monde entier en tant que la « journée des travailleurs ». La « Journée des travailleurs » a la particularité d'être le seul jour célébré en commun par le monde entier.

**Italy:**

Oggi il mondo è pieno di risorse e prosperità grazie allo sforzo di tutti i lavoratori. Tutti gli oggetti di cui ne facciamo uso è il prodotto del lavoro svolto da tutti i lavoratori. La Festa dei Lavoratori è la giornata dedicata per onorare tutti i lavoratori. Inizialmente un operaio lavorava fino a 20 ore al giorno. Successivamente i dipendenti americani protestarono per la diminuzione a otto ore lavorative su una giornata di 24 ore. Durante questa rivolta persero la vita molti lavoratori. A partire dal 1° maggio del 1886 venne accolta la loro richiesta portando in vigore la legge delle 8 ore lavorative al giorno. Questo venne messo in pratica da tutte le nazioni del mondo. Siccome questa legge entrò in vigore un primo maggio, tutt’ora questo giorno viene celebrato in tutto il mondo come “Festa dei lavoratori”. La Festa dei Lavoratori ha la particolarità di essere l’unico giorno celebrato da tutto il mondo.

(4 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் பந்தியைப் படித்து மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

இலக்கியம் என்பது படைப்புக்கலை. மனித இனத்தின் வாழ்வியல் அனுபவங்களைக் கலை நயத்தோடு எடுத்துரைக்கும் இலக்கியம், வரலாற்றின் இயங்கு கருவியாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் அமைகிறது. இலக்கியம் என்னும் சொல் வடமொழிச் சொல்லின் திரிபாகும். இது நோக்கம், குறிக்கோள் முதலான பொருள்களை உடையது. ஞா.தேவநேயப்பாவாணர் சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான அறத்தை எடுத்துக்காட்டுவது இலக்கியம் என்றும் சிறந்த மொழிக்குறிக்கோளான அமைப்பை எடுத்துக் கூறுவது இலக்கணம் எனவும் குறிப்பிட்டுள்ளார். இலக்கணத்திற்கு அணங்கம் என்றும் இலக்கியத்திற்கு அணங்கியம் என்றும் பெயருண்டு. இந்த வரையறையின்கீழ் இலக்கியத்தை இன்பியல் இலக்கியம், அறிவியல் இலக்கியம் என இருவகையாகப் பிரிக்கலாம். இன்பியல் இலக்கியம் கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும் நூல்கள், அறிவியல் இலக்கியம் கற்போருக்கு அறிவை முதன்மையாகத் தரும் நூல்கள். தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை இன்பியல் இலக்கியங்களே. இலக்கியம் என்ற சொல் தமிழில் இன்பியல் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகிய எழுத்துக்கலை வடிவங்களே இன்று தமிழிலக்கியம் எனப் பொதுவாகக் கருதப்பெறுகிறது.

(4 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |